**செய்தி வெளியீடு எண்: 04/09/2021** **நாள்: 17.09.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**மெட்ரோ இரயில் நிலையங்களில் இலவச பொது சுகாதார மருத்துவ முகாம்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஃபோர்டிஸ் மருத்துவமனையுடன் (Fortis Hospitals) இணைந்து மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார க் முகாமை பின்வரும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறுகிறது.

| வ.எண் | தேதி | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 1 | 20.09.2021 (திங்கள்கிழமை) | விம்கோ நகர் மெட்ரோ<br>புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ | காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை |
| 2 | 22.09.2021 (புதன்கிழமை) | தியாகராய கல்லூரி மெட்ரோ<br>கிண்டி மெட்ரோ | |
| 3 | 24.09.2021 (வெள்ளிகிழமை) | உயர் நீதிமன்றம் மெட்ரோ<br>செனாய் நகர் மெட்ரோ | |
| 4 | 27.09.2021 (திங்கள்கிழமை) | புது வண்ணாரப்பேட்டை மெட்ரோ<br>வடபழனி மெட்ரோ | |
| 5 | 29.09.2021 (புதன்கிழமை) | அரசினர் தோட்டம் மெட்ரோ<br>திருமங்கலம் மெட்ரோ | |

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில் கீழே குறிப்பிட்டுள்ள பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

1. பி.எம்.ஐ (உயரம் மற்றும் எடை)
2. இரத்த அழுத்தம்
3. சீரற்ற இரத்த சர்க்கரை
4. வெப்பநிலை
5. துடிப்பு மற்றும் ஆலோசனைகள் போன்றவை வழங்கப்படும்.

மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் இந்த இலவச மருத்துவ முகாமை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

****************************